*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC*** *208/2022*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW****- 1(****LW****-1)*

*Name / Father's Name:* ***திரு.முருகேசன் த/பெ. செங்கோடகவுண்டர்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.*2023.

**துவக்க நேரம்** 11.22

**முதல் விசாரணை**

1) நான் தற்போது உலிபுரத்தில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பக்கத்து காட்டுக்காரர்கள்தான்.

2) கடந்த 06.09.2021 ம் தேதி மாலை சுமார் 05.45 மணியளவில் நான், எனது காட்டின் அருகே ரோட்டில் மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபொழுது, ஆஜர் எதிரி செந்தில் வந்து அவரது மனைவியிடம் பிரச்சனை செய்ததாக சொல்லி, கெட்டவார்த்தையால் திட்டி, என்னிடம் சண்டைபோட்டார்.

3) மேலும் எதிரி செந்தில் குத்துக்கம்பியால் என்னை கையில் அடித்தார். அவருடன் சேர்ந்து எதிரி சத்தியமூர்த்தி(எ)பிரபு கடப்பாரை கம்பியால் எனது வலது கையில் அடித்தார். **(சாட்சி அவரது வலது மற்றும் இடது கையை காண்பித்தார், வலது மற்றும் இடது கை உடைந்து வளைந்த நிலையில் உள்ளது).** பின்னர் எதிரி பழனிவேலும் கொடுவாளை திருப்பி எனது தோள்பட்டையில் அடித்தார். மேலும் மூன்று எதிரிகளும் சேர்ந்து, அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களால் எனது இரண்டு கால்களிலும் அடித்துவிட்டார்கள்.

4) எனது அலறல் சத்தம் கேட்டு அங்கே வந்த எனது மனைவி சுமதியையும் எதிரி சத்தியமூர்த்தி(எ)பிரபு கொடுவாளால், தலையின் பின்மண்டையில் அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டார். அங்கு வந்த எனது மகன் தினேசையும் எதிரி சத்தியமூர்த்தி(எ)பிரபு கடப்பாரையாலும் மற்றும் எதிரி செந்தில் குத்துக்கோலாலும் அடித்து, அவரது கைகளையும் உடைத்துவிட்டார்கள்.

5) பிறகு எங்களது சத்தம் கேட்டு அங்கே அருகிலிருப்பவர்கள் வந்தபொழுது எதிரிகள் மூவரும் அவர்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களை போட்டுவிட்டு என்றிருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அக்கம் பக்கம் இருப்பவர்கள் உதவியுடன் எங்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சு மூலமாக சென்றோம். பிறகு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம்.

6) சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்த தம்மம்பட்டி போலிசார் என்னிடம் விசாரணை செய்து, புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். புகார் வாக்குமூலத்தை போலிசார் என்னிடம் படித்துக்காட்டி, கையெழுத்து வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. என்னிடம் காட்டப்படும் கடப்பாரை மற்றும் இரும்புக்கம்பி ஆகியவைகள்தான் எதிரிகள் எங்களை அடிக்க பயன்படுத்திய ஆயுதங்களாகும். **(கடப்பாரை அ.த.சா.பொ.1 ஆகவும், இரும்புக்கம்பி அ.த.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** நடந்த சம்பவம் பற்றி போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) நானும், எதிரிகளும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது தாத்தாவும், எதிரிகளின் தாத்தாவும் அண்ணன், தம்பி என்றால் சரிதான். எனது அம்மா ராஜம்மாள், எதிரி பழனிவேலின் சின்னம்மா என்றால் சரிதான்.

2) எங்களுக்கும், எதிரிகளுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு காவல் நிலையத்திற்கு சுமார் 4, 5 முறை சென்றிருப்போம் என்றால் சரியல்ல. என் மீது பழனிவேல் கொடுத்த புகாரின்பேரில் இந்நீதிமன்றத்தில் என்மீதும், என் மகன் தினேஷ் மற்றும் என் மனைவி சுமதி ஆகியோர்கள் மீதும் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3) எங்கள் மீது வழக்கு பதியப்பட்ட பிறகுதான் எதிரிகள்மீது வழக்கு பதியப்பட்டது என்றால் சரிதான். நான், பழனிவேலின் கையை உடைத்துவிட்டதாகத்தான் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரியாது. எனது மகனும், அவரும் சண்டைபோட்டுக்கொண்டதாகத்தான் வழக்கு இருந்து வருகிறது.

4) எனது காட்டை தாண்டித்தான் தம்மம்பட்டிக்கு எதிரிகள் வரமுடியும் என்றால் சரிதான். எனது தாயாரை நான் சரிவர பராமரிக்கவில்லை என்பதை குறித்து எதிரி

பழனிவேல் கேட்டதால்தான் எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை என்றும், எங்களுக்குள் நிலம் சம்மந்தமாக எந்த பிரச்சனையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

5) சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார், என்னை விசாரித்தார்கள் என்றால் 2 நாட்கள் கழித்து சேலம் அரசு மருத்துவமனையில் நான் இருந்தபொழுது விசாரணை செய்தார்கள். நான் மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் நானும், எனது மகனும் சுமார் 1 1/2 மாதங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தோம்.

6) எனது மனைவி எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் எங்களுடன் இருந்து எங்களை பார்த்துக்கொண்டார். சம்பவம் நடந்த பின்னர் மேற்படி 1 1/2 மாத காலமும் நானும், எனது மகன் தினேஷ் மற்றும் எனது மனைவி சுமதி ஆகியோர்கள் மருத்துவமனையில்தான் இருந்தோம் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில், சண்டையை பார்த்தவர்கள் வந்து சண்டையை விலக்கிவிட்டதாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

7) புகார் வாக்குமூலம் கொடுத்த பின்னர் போலிசார் மீண்டும் என்னை விசாரணை செய்தார்களா என்றால் நான் திரும்ப கொட்டாய்க்கு வந்தபிறகு விசாரணை செய்தார்கள். சம்பவத்தை பார்த்தவர்கள் யார் யார் என்று எனது போலிஸ் விசாரணையில் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் முருகேசன் என்று சொல்லியுள்ளேன்.

8) புகார் வாக்குமூலத்திலும், போலிசார் விசாரணையிலும், முருகேசன் சம்பவத்தை பார்த்ததாக சொல்லிக்கொள்ளவில்லை என்றும், தற்பொழுது முருகேசன் பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

9) எங்களை அடித்ததாக முதன்முதலாக மருத்துவரிடம்தான் சொன்னேன் என்றால் சரியல்ல, முதலில் முருகேசனிடம் சொன்னேன். பிறகுதான் மருத்துவரிடம் சொன்னேன். மருத்துவரிடம் நான் கூறிய ஆயுதங்கள் தான் தற்பொழுது நீதிமன்றத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆயுதங்களை போலிசார் எங்கு வந்து வாங்கிச்சென்றார்கள் என்றால் எனது கொட்டாயில் வந்து வாங்கிச்சென்றார்கள்.

10) நான் மருத்துவமனையிலிருந்து சிகிச்சை முடித்து வந்த பின்னர்தான் ஆயுதங்களை போலிசார் பெற்றுச்சென்றார்கள் என்றால் சரிதான். எதிரிகள் சம்பவத்தின்பொழுது பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களை நான் பத்திரப்படுத்தி வைத்திருந்ததாக போலிசார் விசாரணையிலோ, புகார் வாக்குமூலத்திலோ சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

11) சம்பவத்தை பின்னிட்டு 108 ஆம்புலன்சு மூலமாக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தோம் என்றால் சரிதான். முருகேசன் தான் சம்பவத்தின்பொழுது எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களை பத்திரப்படுத்தி வைத்திருந்ததாக போலிசார் விசாரணையிலோ, புகார் வாக்குமூலத்திலோ சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

12) என்னைத்தவிர எத்தனை முருகேசன் இவ்வழக்கில் சாட்சிகளாக உள்ளார்கள் என்றால் 2 பேர் முருகேசன் என்ற பெயரில் உள்ளார்கள். பச்சமுத்து மகன் முருகேசன் என்பவர் உலிபுரம் கிராமத்தில் அருந்ததியர் தெருவில் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

13) உலிபுரம் கிராமத்திற்கும், சம்பவம் நடந்த விஷமூங்கில்குட்டை இடத்திற்கும் இடையே எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 2 கி.மீ துாரம் இருக்கும். இவ்வழக்கில் நான் மட்டும்தான் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

14) நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளை நாங்கள் அடித்து கையை உடைத்துவிட்டதாக ஏற்கனவே பழனிவேல் கொடுத்த புகாரிலிருந்து தப்பிக்கவேண்டி எதிரிகளின் மீது நடக்காத சம்பவத்தை சொல்லி புகாரினை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள், எங்களை அடிக்கவில்லை என்றும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆயுதங்களுக்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 11.40

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC** 208/2022*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW**- 2(**LW**-2)*

*Name / Father's Name: **திரு.தினேஷ் த/பெ. முருகேசன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.*2023.

**துவக்க நேரம் 11.41**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது உலிபுரத்தில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பக்கத்து காட்டுக்காரர்கள்தான். அ.சா.1 முருகேசன் எனது தந்தை ஆவார்.

2) கடந்த 06.09.2021 ம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் என் அப்பா, எங்கள் காட்டின் அருகே ரோட்டில் மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபொழுது, ஆஜர் எதிரிகள் செந்தில், சத்தியமூர்த்தி(எ) பிரபு, பழனிவேல் ஆகியோர்கள் வந்து அவர்களது காட்டில் ஆடுமாடுகளை மேய்க்கக்கூடாது என்று சொல்லி தேவடியா பையன், கண்டாரஓலி பையன் என்று கெட்டவார்த்தையால் திட்டி, எங்களிடம் சண்டைபோட்டார்கள்.

3) மேலும் எதிரி பழனிவேல் கொடுவாளை திருப்பி அந்த கம்பியால் எனது அப்பாவின் தோள்பட்டையில் அடித்துவிட்டார். எதிரி சத்தியமூர்த்தி(எ) பிரபு கடப்பாரை கம்பியால் என் அப்பாவின் கையின் மணிக்கட்டில் அடித்து எலும்புமுறிவை ஏற்படுத்திவிட்டார். எதிரி செந்தில் குத்துக்கம்பியால் எனது அப்பாவின் கையில் அடித்து எலும்புமுறிவை ஏற்படுத்தி, குத்தவும் வந்தார். மேலும் எனது அப்பாவின் காலிலும் மூன்று எதிரிகளும் அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களால் அடித்து இரண்டு கால்களிலும் எலும்பு முறிவை ஏற்படுத்திவிட்டார்கள்.

4) எனது அப்பா வலி தாங்கமுடியாமல் கத்தினார். அருகில் இருந்த நானும், என் அம்மாவும் சண்டையை தடுக்க முயற்சிசெய்தபொழுது, எதிரி சத்தியமூர்த்தி(எ) பிரபு கொடுவாளால், தலையின் பின்மண்டையில் எனது அம்மாவை அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டார். என்னையும், எதிரி சத்தியமூர்த்தி(எ) பிரபு கடப்பாரையாலும் மற்றும்

எதிரி செந்தில் கம்பியாலும் அடித்துவிட்டனர். அதில் எனது இரண்டு கைகளும் உடைந்துவிட்டது. தற்பொழுது எனது இடதுமுழங்கையை அறுவை சிகிச்சை செய்து பிளேட் வைத்துள்ளேன்.

5) பிறகு எங்களது சத்தம் கேட்டு அங்கே அருகிலிருப்பவர்கள் வந்தபொழுது எதிரிகள் மூவரும் அவர்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களை போட்டுவிட்டு என்றிருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அக்கம் பக்கம் இருப்பவர்கள் உதவியுடன் எங்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சு மூலமாக சென்றோம். பிறகு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம்.

6) சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்த தம்மம்பட்டி போலிசார் என்னிடம் நடந்த சம்பவம் பற்றி விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் கடப்பாரை மற்றும் இரும்புக்கம்பி ஆகியவைகள்தான் எதிரிகள் எங்களை அடிக்க பயன்படுத்திய ஆயுதங்களாகும்.

**குறுக்கு விசாரணை**

1) எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். ஆனால் எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை. எனது தகப்பனாரின் தாயார், எதிரி பழனிவேலுக்கு சின்னம்மா என்றால் சரிதான். எதிரிகளுக்கும், எங்களுக்கும் ஏற்கனவே பலமுறை தகராறு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2) எதிரி பழனிவேல் அவரது கை உடைந்ததாக கொடுத்த புகாரின்பேரில் எங்கள் மீதும் வழக்கு பதியப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். ஆத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவரிடம் சம்பவம் நடந்த இடம், பயன்படுத்திய ஆயுதங்களை பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3) என் பாட்டிக்கு, எனது அப்பா சரியாக சாப்பாடு போட்டு பராமரிக்கவில்லை என்பதால் அதுபற்றி எதிரி பழனிவேல் எனது அப்பாவிடம் கேட்டபொழுது சண்டை ஏற்பட்டது என்றும், அதில் பழனிவேல், அவர் மனைவி அமராவதி மற்றும் என் பாட்டி ராஜம்மாள் ஆகியோர்களுக்கு கை உடைந்துவிட்டது என்றால் சரியல்ல.

4) எதிரிகள் தம்மம்பட்டியிலிருந்து அவர்கள் வீட்டிற்கு வரவேண்டுமென்றால் எங்கள் காட்டை தாண்டித்தான் வரவேண்டும் என்றால் சரிதான். உலிபுரம் கிராமத்திற்கும், சம்பவம் நடந்த விஷமூங்கில்குட்டை இடத்திற்கும் இடையே எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 2 கி.மீ துாரம் இருக்கும்.

5) நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளை நாங்கள் அடித்து கையை உடைத்துவிட்டதாக ஏற்கனவே பழனிவேல் கொடுத்த புகாரிலிருந்து தப்பிக்கவேண்டி எதிரிகளின் மீது நடக்காத சம்பவத்தை சொல்லி புகாரினை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள், எங்களை அடிக்கவில்லை என்றும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆயுதங்களுக்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.00

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.